தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை-10
2024 - 2025 முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சி
பாடம் - 2, கூட்டுறவு சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டம்
முதல் பருவ அகமதிப்பீட்டுத்தேர்வு - I

நேரம் - 1 மணிநேரம் (காலை 10 மணி முதல் 11 மணி வரை) மதிப்பெண் - 30

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது :- 20 x 1/2 = 10

1. இந்தியாவில் முதல் கூட்டுறவு கடன் சங்கங்களின் சட்டம் அமுல்படுத்திய ஆண்டு
A) 1944 B) 1904 C) 1914 D) 1912
2. 1901-ம் ஆண்டு யாருடைய தலைமையில் கூட்டுறவு கடன் சங்கங்களின் சட்டத்தை தயாரிக்க குழு அமைக்கப்பட்டது.
A) கர்சன் பிரபு B) டூபர்னே C) சர்.எட்வர்ட் லா D) சர்.பிரடெரிக் நிக்கல்சன்
3. கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கீழ்க்கண்ட பிரிவின் கீழ் அளிக்க வேண்டும்
A) 4 B) 6 C) 8 D) 9
4. முதன்மை அமைப்பாளரின் கடமைகளும், பொறுப்புகளுக்குமான சட்டவிதி எண் என்ன?
A) 4 B) 6 C) 9 D) 5
5. முதல் இந்திய கூட்டுறவு கடன் சங்க சட்டத்தில் எத்தனை பிரிவுகள் இருந்தது ?
A) 184 B) 190 C) 29 D) 38
6. அகில இந்திய கிராமக்கடன் மதிப்பீட்டு குழுவின் சிபாரிசு எந்த ஆண்டு அமைக்கப்பட்டது
A) 1953 B) 1934 C) 1954 D) 1961
7. சென்னை மாகாணத்தில் எந்த ஆண்டு மாகாண அளவில் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது ?
A) 1932 B) 1998 C) 1983 D) 1961
8. கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற எத்தனை நாட்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும் ?
A) 9 B) 11 C) 8 D) 6
9. பதிவாளர் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற எத்தனை நாட்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும் ?
A) 130 B) 120 C) 110 D) 140
10. துணைவிதி திருத்தம் மேற்கொள்ள வேண்டிய சட்டப்பிரிவு மற்றும் விதி எண்கள்
A) பிரிவு 9 விதி 6 B) பிரிவு 11 விதி 19 C) பிரிவு 11 விதி 9
D) பிரிவு 13 விதி 18
11. பதிவான ஒரு கூட்டுறவு சங்கமானது எத்தனை மாதத்திற்குள் தனது வேலையை துவங்க வேண்டும்
A) 1 மாதம் B) 5 மாதங்கள் C) 4 மாதங்கள் D) 3 மாதங்கள்
12. கட்டாய துணைவிதி திருத்தம் சட்டப்பிரிவு எண்
A) 9 B) 11 C) 12 D) 13
13. கூட்டுறவு சங்கங்களை பிரித்தல் மற்றும் இணைத்தலுக்கான பிரிவு மற்றும் விதி எண்கள்
A) 13 (18) B) 14 (8) C) 11 (9) D) 9 (11)
14. பேரவையினை கூட்டுவதற்கு எத்தனை முழு நாட்கள் முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்
A) 7 நாட்கள் B) 15 நாட்கள் C) 30 நாட்கள் D) 14 நாட்கள்
15. வந்திருந்து வாக்களித்தவர்களில் எத்தனை பகுதிக்கு ஆதரவான வாக்குகளில் இணைவதற்கு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்
A) 2/3 B) 1/3 C) 1/4 D) 2/4
16. உறுப்பினர்களின் தகுதியின்மைக்கான சட்டம் பிரிவு
A) 22 B) 19 C) 23 D) 34
17. கூட்டுறவு சங்கங்களின் நிர்வாக குழுவில் எத்தனை சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கிட வேண்டும்.
A) 40 % B) 25 % C) 30 % D) 18 %
18. எந்த சட்டப்பிரிவின் கீழ் கையூட்டு பழக்கத்திற்காக தண்டனை வழங்கப்படும்
A) 172 B) 62 C) 118 D) 162
19. ஒரு உறுப்பினர் ஒரே சமயத்தில் எத்தனை சங்கங்களுக்கு அதிகப்படாமல் நிர்வாக குழுவில் இடம் பெறலாம்
A) 3 B) 5 C) 4 D) 7
20. சட்டபூர்வ விசாரணை எந்த பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும்
A) 80 B) 81 C) 82 D) 83

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :- 20 x 1/2 = 10

21. சம்பளத்திலிருந்து பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி போன்றவற்றை பிடித்தம் செய்த -------- நாட்களுக்குள் சம்பளம் வழங்கும் அதிகாரி சம்மந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்
A) 14 நாட்கள் B) 7 நாட்கள் C) 15 நாட்கள் D) 30 நாட்கள்
22. சங்கத்தின் முகவரி மாற்றப்பட்ட ---------- நாட்களுக்குள் பதிவாளருக்கு சங்கம் தெரிவிக்க வேண்டும்
A) 60 நாட்கள் B) 7 நாட்கள் C) 30 நாட்கள் D) 15 நாட்கள்

23. ஒரு உறுப்பினர் ஒரே நேரத்தில் ..................சங்கங்களுக்கு மேல் தலைவராக தேர்ந்தெடுக்கப்படவோ அல்லது நியமனம் செய்யவோ கூடாது.

A) 3 B) 2 C) 5 D) 4

24. தேர்தலுக்கும் முன்பாக சங்கத்திற்கான தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டிய நாட்கள் ——————

A) 15 B) 30 C) 60 D) 21

25. தேர்தல் அதிகாரி எந்தெந்த வாக்குகளை நிராகரிக்கலாம் என்பதற்கான விதி எண் ———— குறிப்பிடப்பட்டுள்ளது.

A) 53(8)(b) B) 53(8)(c) C) 54(8) (a) D) 53(8)(a)

26. பேரவை கூட்டத்திற்கான நடைமுறைகள் விதி எண் ——— குறிப்பிடப்பட்டுள்ளது.

A) 36 B) 35 C) 46 D) 26

27. சங்க உறுப்பினரை நீக்குவதற்கான சட்டம் பிரிவு எண் —————— ஆகும்.

A) 35 (விதிகள் 37 &39) B) 25 (விதிகள் 37 & 39) C) 25 (விதிகள் 27 &29)

D) 23 (விதிகள் 33&34)

28. சங்கம் பரிந்தலுக்கான முதல் தீர்மான நகலினை உறுப்பினர்களுக்கு ——— மாதத்திற்குள் அனுப்ப வேண்டும்.

A) 3 மாதங்கள் B) 1 மாதம் C) 2 மாதங்கள் D) 6 மாதங்கள்

29. சங்கம் இணைப்பு பேரவையை நடத்துவதற்கான தலைவரை தேர்ந்தெடுக்கும் சட்ட விதி எண் ——————

A) 15 B) 16 C) 18 D) 11

30. இணை உறுப்பினர் ——— சட்டப்பிரிவின் கீழ் சேர்க்கப்படுவார்கள்.

A) 22 B) 23 C) 24 D) 25

31. இந்திய ஒப்பந்த சட்டம் ———— ஆண்டு கொண்டு வரப்பட்டது.

A) 1857 B) 1872 C) 1782 D) 1864

32. ஒரு நபர் கூட்டுறவு சங்கத்தில் சேர விண்ணப்பம் கொடுத்தவுடன் ——— நாட்களுக்குள் சேர்ப்பது தொடர்பாக முடிவு எடுக்கப்பட வேண்டும்.

A) 30 B) 60 C) 15 D) 7

33. கூட்டுறவு தேர்தல் ஆணையம் ——— சட்டப்பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

A) 33 B) 23-A C) 33-A D) 74

34. சங்க உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமை பிரிவு எண் மற்றும் விதி எண் ——ஆகும்.

A) 25 (28) B) 26 (37) C) 26 (38) D) 28(11)

35. உறுப்பினர் தன் சம்மந்தப்பட்ட கணக்குகளை ஆய்வு செய்ய ஒரு கூட்டுறவு ஆண்டுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ———— ஆகும்.

A) ரூ. 10/- B) ரூ. 100/- C) ரூ. 5/- D) ரூ. 50/-

36. ஒரு கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, நீக்கப்பட்ட தேதியிலிருந்து ——— ஆண்டுகள் கழித்து சங்கத்தில் உறுப்பினர் ஆக முடியும்.

A) 4 ஆண்டுகள் B) 10 ஆண்டுகள் C) 3 ஆண்டுகள் D) 1 ஆண்டு

37. ஒரு கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருந்தவர் பதவியை ராஜினாமா செய்த தேதியிலிருந்து ——— ஆண்டுகள் கழித்து மீண்டும் உறுப்பினர் ஆக முடியும்

A) 1 ஆண்டு B) 3 ஆண்டுகள் C) 2 ஆண்டுகள் D) 5 ஆண்டுகள்

38. நிலவரி வசூல் சட்டம் ——— ஆண்டு கொண்டு வரப்பட்டது.

A) 1874 B) 1864 C) 1857 D) 1899

39. இந்திய முத்திரைதாள் சட்டம் ——— ஆண்டு கொண்டு வரப்பட்டது.

A) 1869 B) 1904 C) 1899 D) 1912

40. கூட்டுறவு சங்கங்கள் பராமரிக்கப்பட வேண்டிய புத்தகங்கள் சட்டவிதி ——— ஆகும்.

A) விதி 20 B) விதி 22 C) விதி 41 D) விதி 21

III. <u>பின்வரும் கூற்றுகளில் சரியானதை குறிப்பிடவும் :-</u> 20 x 1/2 = 10

41. (A) சட்டப்பிரிவு 40-ன்படி சங்கத்திற்கு கடன் வழங்கிய அசையும் சொத்துக்கள் மீது உரிமை உள்ளது

(B) சட்டப்பிரிவு 30-ன்படி சங்கத்திற்குகடன் வழங்கிய அசையும் சொத்துக்கள் மீது உரிமை உள்ளது

(C) சட்டப்பிரிவு 32-ன்படி சங்கத்திற்குகடன் வழங்கிய அசையும் சொத்துக்கள் மீது உரிமை உள்ளது

(D) சட்டப்பிரிவு 41-ன்படி சங்கத்திற்குகடன் வழங்கிய அசையும் சொத்துக்கள் மீது உரிமை உள்ளது

42. (A) சட்டப்பிரிவு 42 (ஆ)-ன்படி பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி போன்றவைகளை ஜப்தி செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

(B) சட்டப்பிரிவு 44 (இ)-ன்படி பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி போன்றவைகளை ஜப்தி செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

(C) சட்டப்பிரிவு 33 (ஈ)-ன்படி பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி போன்றவைகளை ஜப்தி செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

(D) சட்டப்பிரிவு 45-ன்படி பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி போன்றவைகளை ஜப்தி செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

43. (A) இசைந்து சேர்த்து கொள்ளல் தொடர்பான முதல் நிர்வாக குழு கூட்டத்திற்கு நிர்வாகிகளுக்கு குறைந்தது 2 நாட்கள் கூட்ட முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்.

(B) இசைந்து சேர்த்து கொள்ளல் தொடர்பான முதல் நிர்வாக குழு கூட்டத்திற்கு நிர்வாகிகளுக்கு குறைந்தது 7 நாட்கள் கூட்ட முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்.

(C) இசைந்து சேர்த்து கொள்ளல் தொடர்பான முதல் நிர்வாக குழு கூட்டத்திற்கு நிர்வாகிகளுக்கு குறைந்தது 15 நாட்கள் கூட்ட முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்.

(D) இசைந்து சேர்த்து கொள்ளல் தொடர்பான முதல் நிர்வாக குழு கூட்டத்திற்கு நிர்வாகிகளுக்கு குறைந்தது 3 நாட்கள் கூட்ட முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்.

44. (A) சங்கத்தின் இடைக்கால நிர்வாகக்குழுவின் பொதுவான பதவிகாலம் 6 மாதங்கள் ஆகும்.

(B) சங்கத்தின் இடைக்கால நிர்வாகக்குழுவின் பொதுவான பதவிகாலம் 1வருடம் ஆகும்.

(C) சங்கத்தின் இடைக்கால நிர்வாகக்குழுவின் பொதுவான பதவிகாலம் 3 மாதங்கள் ஆகும்.

(D) சங்கத்தின் இடைக்கால நிர்வாகக்குழுவின் பொதுவான பதவிகாலம் 5ஆண்டுகள் ஆகும்.

45. (A) சட்டப்பிரிவு 14 விதி (17) -ன்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சங்கங்களை பொது நன்மையை கருதி பதிவாளர் இணைத்து ஆணையிடலாம்.

(B) சட்டப்பிரிவு 13 விதி (17) -ன்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சங்கங்களை பொது நன்மையை கருதி பதிவாளர் இணைத்து ஆணையிடலாம்.

(C) சட்டப்பிரிவு 12 விதி (15) -ன்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சங்கங்களை பொது நன்மையை கருதி பதிவாளர் இணைத்து ஆணையிடலாம்.

(D) சட்டப்பிரிவு 14 விதி (7) -ன்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சங்கங்களை பொது நன்மையை கருதி பதிவாளர் இணைத்து ஆணையிடலாம்.

46. (A) பிரதிநிதித்துவ மகாசபைக்கு 40 உறுப்பினர்களை கொண்டு தொகுதியை அமைக்கலாம்.

(B) பிரதிநிதித்துவ மகாசபைக்கு 50 உறுப்பினர்களை கொண்டு தொகுதியை அமைக்கலாம்.

(C) பிரதிநிதித்துவ மகாசபைக்கு 25 உறுப்பினர்களை கொண்டு தொகுதியை அமைக்கலாம்.

(D) பிரதிநிதித்துவ மகாசபைக்கு 100 உறுப்பினர்களை கொண்டு தொகுதியை அமைக்கலாம்.

47. (A) கூட்டுறவுசங்கங்களை பதிவு செய்வதற்கான சட்டம் பிரிவு 9

(B) கூட்டுறவுசங்கங்களை பதிவு செய்வதற்கான சட்டம் பிரிவு 11

(C) கூட்டுறவுசங்கங்களை பதிவு செய்வதற்கான சட்டம் பிரிவு 12

(D) கூட்டுறவுசங்கங்களை பதிவு செய்வதற்கான சட்டம் பிரிவு 8

48. (A) முதன்மை பங்கு மூலதன நிதி சட்டப்பிரிவு 43

(B) முதன்மை பங்கு மூலதன நிதி சட்டப்பிரிவு 50

(C) முதன்மை பங்கு மூலதன நிதி சட்டப்பிரிவு 53

(D) முதன்மை பங்கு மூலதன நிதி சட்டப்பிரிவு 55

49. (A) இந்திய ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டிய பிரிவு எண் 4

(B) இந்திய ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டிய பிரிவு எண் 5

(C) இந்திய ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டிய பிரிவு எண் 2

(D) இந்திய ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டிய பிரிவு எண் 12

50. (A) காலகெடுவுக்குள் மேல்முறையீடு செய்ய இயலாமல் போனதிற்கான காரணங்களுக்கு பொருத்தருள்க விண்ணப்பம் நீதிமன்றத்திற்கு இந்திய வரையறை சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க வேண்டிய பிரிவு எண் 4

(B) காலகெடுவுக்குள் மேல்முறையீடு செய்ய இயலாமல் போனதிற்கான காரணங்களுக்கு பொருத்தருள்க விண்ணப்பம் நீதிமன்றத்திற்கு இந்திய வரையறை சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க வேண்டிய பிரிவு எண் 5

(C) காலகெடுவுக்குள் மேல்முறையீடு செய்ய இயலாமல் போனதிற்கான காரணங்களுக்கு பொருத்தருள்க விண்ணப்பம் நீதிமன்றத்திற்கு இந்திய வரையறை சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க வேண்டிய பிரிவு எண் 10

(D) காலகெடுவுக்குள் மேல்முறையீடு செய்ய இயலாமல் போனதிற்கான காரணங்களுக்கு பொருத்தருள்க விண்ணப்பம் நீதிமன்றத்திற்கு இந்திய வரையறை சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க வேண்டிய பிரிவு எண் 12

51. (A) அசையா சொத்துக்கள் மீதான அடமான கடனை வசூலிக்கும் கால அவகாசம் 12 ஆண்டுகள்

(B) அசையா சொத்துக்கள் மீதான அடமான கடனை வசூலிக்கும் கால அவகாசம் 3 ஆண்டுகள்

(C) அசையா சொத்துக்கள் மீதான அடமான கடனை வசூலிக்கும் கால அவகாசம் 5 ஆண்டுகள்

(D) அசையா சொத்துக்கள் மீதான அடமான கடனை வசூலிக்கும் கால அவகாசம் 7 ஆண்டுகள்

52. (A) ஒரு இளவர் பாதுகாப்பாளரின் கூட வாழும் போது அவர் ஒப்பந்தத்தில் ஈடுபட பூர்த்தி ஆகியிருக்க வேண்டிய வயது 18 ஆகும்.
(B) ஒரு இளவர் பாதுகாப்பாளரின் கூட வாழும் போது அவர் ஒப்பந்தத்தில் ஈடுபட பூர்த்தி ஆகியிருக்க வேண்டிய வயது 20 ஆகும்.
(C) ஒரு இளவர் பாதுகாப்பாளரின் கூட வாழும் போது அவர் ஒப்பந்தத்தில் ஈடுபட பூர்த்தி ஆகியிருக்க வேண்டிய வயது 21 ஆகும்.
(D) ஒரு இளவர் பாதுகாப்பாளரின் கூட வாழும் போது அவர் ஒப்பந்தத்தில் ஈடுபட பூர்த்தி ஆகியிருக்க வேண்டிய வயது 19 ஆகும்.

53. (A) சங்கத்தின் சிறப்பு பேரவையை கூட்டிட மொத்த உறுப்பினர்களில் எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1/3 அல்லது 25 நபர்கள்
(B) சங்கத்தின் சிறப்பு பேரவையை கூட்டிட மொத்த உறுப்பினர்களில் எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1/4 அல்லது 25 நபர்கள்
(C) சங்கத்தின் சிறப்பு பேரவையை கூட்டிட மொத்த உறுப்பினர்களில் எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1/4 அல்லது 30 நபர்கள்
(D) சங்கத்தின் சிறப்பு பேரவையை கூட்டிட மொத்த உறுப்பினர்களில் எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 2/3 அல்லது 20 நபர்கள்

54. (A) 30 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும்.
(B) 90 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும்.
(C) 60 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும்.
(D) 80 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும்.

55. (A) தொடக்க சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டப்பிரிவு எண் பிரிவு 33 (a) & (b)
(B) தொடக்க சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டப்பிரிவு எண் பிரிவு 33 (a) & (c)
(C) தொடக்க சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டப்பிரிவு எண் பிரிவு 34 (a) & (b)
(D) தொடக்க சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டப்பிரிவு எண் பிரிவு 34 (a) & (c)

56. (A) துணை அரசு பங்கு மூலதன நிதி சட்டப்பிரிவு 45 ஆகும்.
(B) துணை அரசு பங்கு மூலதன நிதி சட்டப்பிரிவு 55 ஆகும்.
(C) துணை அரசு பங்கு மூலதன நிதி சட்டப்பிரிவு 35 ஆகும்.
(D) துணை அரசு பங்கு மூலதன நிதி சட்டப்பிரிவு 52 ஆகும்.

57. (A) அரசின் இதர உதவிகளுக்கான சட்டப்பிரிவு 54 ஆகும்.
(B) அரசின் இதர உதவிகளுக்கான சட்டப்பிரிவு 57 ஆகும்.
(C) அரசின் இதர உதவிகளுக்கான சட்டப்பிரிவு 64 ஆகும்.
(D) அரசின் இதர உதவிகளுக்கான சட்டப்பிரிவு 74 ஆகும்.

58. (A) கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழுவில் தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டிய சதவிகிதம் 30 %
(B) கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழுவில் தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டிய சதவிகிதம் 18 %
(C) கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழுவில் தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டிய சதவிகிதம் 20 %
(D) கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழுவில் தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டிய சதவிகிதம் 12 %

59. (A) தண்டவசூலுக்கான சட்டப்பிரிவு எண் 90
(B) தண்டவசூலுக்கான சட்டப்பிரிவு எண் 87
(C) தண்டவசூலுக்கான சட்டப்பிரிவு எண் 34
(D) தண்டவசூலுக்கான சட்டப்பிரிவு எண் 118

60. (A) துணைவிதி திருத்தம் செய்ய பேரவை தீர்மானம் இயற்றிய 6 மாதங்களுக்குள் திருத்தம் செய்திட பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்
(B) துணைவிதி திருத்தம் செய்ய பேரவை தீர்மானம் இயற்றிய 3 மாதங்களுக்குள் திருத்தம் செய்திட பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்
(C) துணைவிதி திருத்தம் செய்ய பேரவை தீர்மானம் இயற்றிய 2 மாதங்களுக்குள் திருத்தம் செய்திட பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்
(D) துணைவிதி திருத்தம் செய்ய பேரவை தீர்மானம் இயற்றிய 7நாட்களுக்குள் திருத்தம் செய்திட பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்

........

## பாண்டியநாடு கூட்டுறவு மேலாண்மை நிலையம்
## 2024-2025ஆம் ஆண்டு முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சி
## முதல் பருவ அகமதிப்பீட்டுத்தேர்வு - II
## பாடம் 2 -கூட்டுறவு சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டங்கள்

நேரம் -1 மணிநேரம்

மதிப்பெண் - 60x1/2=30

1. பொதுப் பணி நிலைத்தரம் ஏற்படுத்துவது குறித்து தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டப்பிரிவு............ ல் குறிப்பிடப்பட்டுள்ளது
   அ) பிரிவு 73 ஆ) பிரிவு 74 இ) பிரிவு 75 ஈ) பிரிவு 76
2. நிர்வாக இயக்குநர் நியமனம் பற்றி எந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது
   அ) விதி 33(3) ஆ) விதி 33(7) இ) விதி 33(4) ஈ) விதி 33(8)
3. தணிக்கைக் கட்டணம் செலுத்தாத சங்கங்கள் மீது சட்டப்பிரிவு ............ன் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்
   அ) பிரிவு 148 ஆ) பிரிவு 118 இ) பிரிவு 138 ஈ) இவை எதுவுமில்லை
4. பிரிவு 81 விசாரணை முடிவுகள் மீது எவ்வளவு காலத்திற்க்குள் நடவடிக்கை தொடர வேண்டும்
   அ) 1 மாதம் ஆ) 3 மாதம் இ) 2 மாதம் ஈ) 6 மாதம்
5. தண்டத்தீர்வை நடவடிக்கை எடுக்கக் காலக் கெடு
   அ) தவறு நடந்த தேதியிலிருந்து 6 ஆண்டுகளுக்குள்
   ஆ) தவறு கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகளுக்குள்
   இ) தவறு நடந்த தேதியிலிருந்து 7 ஆண்டுகளுக்குள
   ஈ) தவறு கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து 7 ஆண்டுகளுக்குள்
6. சங்க நிர்வாகக்குழுவைக் கலைக்கப்பதற்கு அறிவிப்புக் கொடுத்த தேதியிலிருந்து ..........மாதத்திற்குள் ஆணை வழங்க வேண்டும்
   அ) 31 ஆ) 2 இ) 4 ஈ) இவை எதுவுமில்லை
7. செயலாட்சியர் கடமை பற்றிய விதி ............ல் தெரிவிக்கப்படுகிறது
   அ) 106 ஆ) 96 இ) 116 ஈ) 126
8. ஒரு சங்கப் பணியாளர் தொடர்பான வழக்குகள் எப்பிரிவின் கீழ் எடுத்துக் கொள்ளப்படாது
   அ) பிரிவு 152 ஆ) பிரிவு 153 இ) பிரிவு 90 ஈ) இவை எதுவுமில்லை
9. தாவாக் கட்டணம் பற்றி ............. ல் தொிவிக்கப்பட்டுள்ளது
   அ) ஷெட்யூல் 3 ஆ) ஷெட்யூல் 5 இ) ஷெட்யூல் 1 ஈ) ஷெட்யூல் 2
10. மாநில வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியின் பொறுப்பாட்சியர் நியமனம் ............. பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது
    அ) ) பிரிவு 121 ஆ) பிரிவு 131 இ) பிரிவு 115 ஈ) இவை எதுவுமில்லை
11. நீண்ட காலக் கடன்கள் வழங்கல் பற்றிய பிரிவு ..........ல் தெரிவிக்கப்பட்டுள்ளது
    அ) பிரிவு 110 ஆ) பிரிவு 114 இ) பிரிவு 104 ஈ) பிரிவு 120
12. அழைப்பாணை சார்பு செய்யும் விதம்பற்றி விதி ..........ல் தெரிவிக்கப்பட்டுள்ளது
    அ) 114 ஆ) 112 இ) 111 ஈ) இவை எதுவுமில்லை
13. ஒரு சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் ராஜினாமா செய்தால் அது தொடர்பான இறுதி முடிவைத் ............ நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்
    அ) 60 ஆ) 30 இ) 90 ஈ) 120
14. லாபத்தில் செயல்படும் சங்கம் மதிப்பூதியம் விதி............ ல் தெரிவித்தபடி வழங்க வேண்டும்
    அ) 99 ஆ) 98 இ) 94 ஈ) 91
15. பணியாளர் தேர்வுக்குழு பிரிவு ............ல் குறிப்பிட்டபடி அமைக்கப்படலாம்
    அ) 64 ஆ) 69 இ) 79 ஈ) 74

16. கூட்டுறவு நிறுவனங்களில் பதிவேடுகள் பராமரிக்க வேண்டிய பொறுப்பு ............க்கு வழங்கப்பட்டுள்ளது
அ) தலைவர் ஆ) உபதலைவர் இ) செயலாளர் ஈ) பதிவாளர்

17. பிரிவு 81ன் படி விசாரணை முடிந்து ............ நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்
அ) 10 ஆ) 20 இ) 90 ஈ) 30

18. தணிக்கை நடைமுறை விதி ............ல் தெரிவிக்கப்பட்டுள்ளது
அ) 106 ஆ) 102 இ) 110 ஈ) இவை எதுவுமில்லை

19. தகராறு தொடர்புடைய ஆவணங்கள்............ஆண்டுகள் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்,
அ) 5 ஆ) 10 இ) 20 ஈ)15

20. அசையா சொத்து ஜப்தி செய்யும் முறை விதி .........ல் தெரிவிக்கப்பட்டுள்ளது
அ) 121 ஆ) 126 இ) 131 ஈ)136

21. பிரிவு 90ன் கீழ் பணம் சம்பந்தப்படாத வழக்குகளுக்கான கட்டணம் ரூ...........
அ) 200 ஆ) 300 இ) 100 ஈ) 150

22. பிரிவு 89ன் படி செயலாட்சியர் நியமிக்கப்பட்டால் அவரது பதவிக்காலம் ............. மாதம்
அ) 3 ஆ) 9 இ) 6 ஈ) 12

23. தணிக்கை குறைகளை .............. மாதத்திற்குள் நிவர்த்தி செய்ய வேண்டும்
அ) 6 ஆ) 3 இ) 9 ஈ) இவை எதுவுமில்லை

24. தகவல் அறியும் உரிமைச் சட்டம் குடியரசுத் தலைவரால் எப்போது ஒப்புதல் வழங்கப்பட்டது
அ) 15.12.2004 ஆ) 15.06.2005 இ) 21.6.2005 ஈ) 12.10.2005

25. ஒரு சங்கம் பிரித்தலின போது இரண்டாம் நிலை பேரவை முதல் நிலை தீர்மானத்தை உறுப்பினர்களுக்கு அனுப்பிய தேதியிலிருந்து ............ மாதம் கழித்து கூட்டப்பட வேண்டும்
அ) 2 ஆ) 1 இ) 3 ஈ) இவை எதுவுமில்லை

26. இரு சங்கங்களை இணைக்கும் போது இணைப்புப் பேரவை விதி ............ன் படி கூட்டப்பட்ட வேண்டும்
அ) 6 ஆ) 26 இ) 36 ஈ) 16

27. இணைப்புப் பேரவை, முதல் கனிப் பேரவை தீர்மானம் உறுப்பினர்களுக்கு அனுப்பிய தேதியிலிருந்து.............மாதத்திற்குள் கூட்டப்பட வேண்டும்
அ) 2 ஆ) 1 இ) 4 ஈ) 3

28. பொது நன்மை கருதி இரு சங்கங்களைப் பதிவாளர் பிரிவு ............ன் கிழ் இணைத்து ஆணை வழங்கலாம்
அ) 14 ஆ) 24 இ) 34 ஈ) 44

29. இடைக்கால நிர்வாகக் குழுவின் பதவிக்காலம் ............ மாதம் ஆகும்
அ) 3 ஆ) 6 இ) 8 ஈ) இவை எதுவுமில்லை

30. இணைப்புப் பேரவை நடந்த ............ தினங்களுக்குள் புதிய சங்கத்தைப் பதிவு செய்ய விண்ணப்பிக்க வேண்டும்
அ) 9 ஆ) 7 இ) 5 ஈ) 10

31. நிர்வாகக் குழு உறுப்பினர் தகுதியின்மை பிரிவு ...........ல் தெரிவிக்கப்பட்டுள்ளது
அ) 24 ஆ) 14 இ) 34 ஈ) 36

32. ஒரு நிர்வாகக் குழு உறுப்பினர் தொடர்ச்சியாக ............ நிர்வாகக் குழுக்கூட்டங்களுக்கு வரவில்லை என்றால் அவர் தனது பதவியை இழந்து விடுவர்
அ) 4 ஆ) 6 இ) 9 ஈ) 2

33. தண்டத்தீர்வை நடவடிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டபின் ............ ஆண்டுகள் நிாவாகக்குழு உறுப்பினராக முடியாது
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

34. தகுதியின்மைக்கு உட்பட்ட ஒரு நிர்வாகக்குழு உறுப்பினரை சங்கம் அவரை தகுதி இழப்புக்கு ஆளான நாளிலிருந்து ............. மாத்திற்குள் நீக்க வேண்டும்
அ) 1 ஆ) 2 இ) 4 ஈ) 5

35. நெருங்கிய உறவினர் என்பது விதி ............ல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது
அ) 53 ஆ) 43 இ) 63 ஈ) இவை எதுவுமில்லை
36. அட்டவணைப்படுத்தப்படுத்தப்பட்ட சங்கங்கள் பிரிவு ............ல் தெரிவிக்கப்பட்டுள்ளது
அ) பிரிவு 2(25) ஆ) 179 இ) 189 ஈ) அ மற்றும் ஆ
37. தொழிற் தகராறு சட்டத்தின் படி பொதுப் பயன்பாட்டுப் பணி என வகைப்படுத்தப்படாத தொழில்
அ) மருத்துவமனைகள் ஆ) போக்கவரத்துத் தொழில் இ) வங்கித் தொழில்
ஈ) பத்திரிகை காகிதம் உற்பத்தித் தொழில்
38. தொழிற் தகராறு சட்டப்படி ரூ............. வரை மாதம் ஊதியம் பெறுபவர் மட்டுமே வழக்குத் தொடர தகுதியுடையவர்
அ) 1000 ஆ) 2000 இ) 3000 ஈ) 1600
39. செயற்பதிவாளர்கள் கூட்டுறவு சங்க சட்டப் பிரிவு ............ன் படி நியமிக்கப்பட்டுள்ளனர்
அ) 3 ஆ) 6 இ) 9 ஈ) இவை எதுவுமில்லை
40. தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற நாள்
அ) 15.7.1983 ஆ) 15.9.1983 இ) 15.7.1993 ஈ) 15.9.1993
41. தமிழ்நாடு பிழைப்பூதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்
அ) 01.09.1992 ஆ) 01.09.1972 இ) 01.09.1982 ஈ) இவை எதுவுமில்லை
42. தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டப் பிரிவு .............ன் படி ஒரு தொழிலாளியை இடைநீக்கம் செய்யலாம்
அ) 1(g) ஆ) 3(g) இ) 4(g) ஈ) 2(g)
43. தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டப்பிரிவு ..............ன் படி பிழைப்பூதியத்தைத் திரும்பச் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை
அ) 2(3) ஆ) 3(3) இ) 1(3) ஈ) இவை எதுவுமில்லை
44. தற்காலிகப் பணிநீக்கம் தொடர்பான ஆவணங்கள் பிழைப்பூதியம் வழங்கிய தேதியிலிருந்து ........... ஆண்டுகள் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்
அ) 2 ஆ) 4 இ) 6 ஈ)5
45. தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டத்தைப் பின்பற்றாதவர்களுக்கு பிரிவு ...........ன் படி தண்டனை வழங்கப்படும்
அ) 9 ஆ) 19 இ) 29 ஈ) 39
46. இந்திய ஊக்க ஊதியச் சட்டப்பிரிவு .................ன் படி 10 அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணி செய்தால் ஊக்க ஊதியம் வழங்கப்பட வேண்டும்
அ) 2(3) ஆ) 1(3) இ) 3(3) ஈ) 4(3)
47. ஒரு ஆண்டில் .............. நாட்களுக்குள் குறையாமல் சம்பளத்துடன் பணி செய்தால் ஊக்க ஊதியம் பெறலாம்
அ) 20 ஆ) 40 இ) 60 ஈ) 30
48. ஒரு தொழிலாளி ஊக்க ஊதியம் முன்பணம் பெற பிரிவு ................ன் படி தகுதி உண்டு
அ) 17 ஆ) 27 இ) 37 ஈ) 47
49. ஊக்க ஊதியம் பெற தகுதியின்மை ................ல் தெரிவிக்கப்பட்டுள்ளது
அ) பிரிவு 39 ஆ) பிரிவு 29 இ) பிரிவு 19 ஈ) பிரிவு 9
50. ஊக்க ஊதியம் வழங்க கால அளவு ...........ல் தெரிவிக்கப்பட்டுள்ளது
அ) பிரிவு 19 ஆ) பிரிவு 49 இ) பிரிவு 59 ஈ) இவை எதுவுமில்லை
51. தகவல் அறியும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாள் ................ ஆகும்
அ) 12.08.2005 ஆ) 12.09.2005 இ) 12.10.2005 ஈ) 12.11.2005
52. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யும் பிரிவு .............. ஆகும்
அ) பிரிவு 19(1) ஆ) பிரிவு 59(1) இ) பிரிவு 49(1) ஈ) இவை எதுவுமில்லை
53. தகவல் அளிக்க கால அளவு ........... நாட்கள்
அ) 30 ஆ) 35 இ) 20 ஈ) இவை எதுவுமில்லை

54. தகவல் அறியும் சட்டத்தில் மேல்முறையீட்டு மனுக்களுக்கு ........... நாட்களுக்குள் தீர்வு செய்ய வேண்டும்

அ) 30 ஆ) 40 இ) 60 ஈ) 45

55. தகவல் அறியும் சட்டத்தினபடி தகவல் பெற ரூ............ கட்டணமாகச் செலுத்த வேண்டும்

அ) 20 ஆ) 10 இ) 30 ஈ) 50

56. மாநிலத் தகவல் ஆணையரின் பதவிக்காலம்

அ) 5 வருடம் ஆ) 10 வருடம் இ) 3 வருடம் ஈ) 15 வருடம்

57. மாநிலத் தகவல் ஆணையர் தனது ராஜினாமாக் கடிதத்தை ........... இடம் அளிக்க வேண்டும்

அ) முதலமைச்சர் ஆ) குடியரசுத் தலைவர் இ) ஆளுநர் ஈ) இவர்களில் யாருமில்லை

58. தகவல் அறியும் சட்டப்பிரிவு .............ன் படி பணிநீக்கம் செய்யப்படலாம்

அ) 27 ஆ) 17 இ) 37 ஈ) 47

59. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ரூ.............. வரை அபராதம் விதிக்கப்படலாம்

அ) ரூ.5000 ஆ) ரூ.50000 இ) ரூ.25000 ஈ) ரூ.2500

60. தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதி............ல் மேலாண்மை இயக்குநரின் அதிகாரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது

அ) விதி 145 ஆ) விதி 146 இ) விதி 166 ஈ) விதி 156

1. பொது நலன் கருதி ஒரு சங்கத்தை ஒருங்கிணைக்கக் கட்டளையிடும் அதிகாரம் கீழ்க்கண்ட சட்டப்பிரிவில் பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

(A) பிரிவு 18
(B) பிரிவு 19
(C) பிரிவு 20
(D) பிரிவு 14

2. உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006-ன்படி உரிய உரிமம் இன்றி உணவு தொழில் செய்வோருக்கு 6 மாத கால தண்டனை மற்றும் ரூ.5.00 இலட்சம் அபராதம் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ள சட்டப்பிரிவு

(A) பிரிவு 63
(B) பிரிவு 48
(C) பிரிவு 50
(D) பிரிவு 67

3. கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு ______________ ன் கீழ் "கூட்டுறவு" என்ற சொல்லை அல்லது அதற்கு இணையான சொல்லை பயன்படுத்தத் தடை உள்ளது.

(A) பிரிவு 159
(B) பிரிவு 157
(C) பிரிவு 160
(D) பிரிவு 161

4. ஊதியம் வழங்கும் சட்டம் 1936 தொழில்களுக்கு எக்குழுவின் பரிந்துரையின்படி கொண்டு வரப்பட்டது ?

(A) சந்தானம் குழு
(B) ராயல் குழு
(C) வி.எல். மேத்தா குழு
(D) அகில இந்திய கிராமக் கடன் மதிப்பீட்டுக் குழு

5. 1901 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட நபரின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கான வழிமுறைகளைப் பரிந்துரை செய்தது

(A) சர் பிரெடெரிக் நிக்கல்சன்
(B) சர் எட்வர்ட் லா
(C) சர் ஜான் மார்ஷல்
(D) ஆர் டி பானர்ஜி

6. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் கீழ்கண்ட எண்ணிக்கையிலான விதிகளைக் கொண்டுள்ளது.

(A) 167 விதிகள் (B) 188 விதிகள்

(C) 190 விதிகள் (D) 191 விதிகள்

7. ஒரு கூட்டுறவு சங்கத்தின் செயல்பாட்டு எல்லை எந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

(A) கூட்டுறவு சட்டம்

(B) அரசு ஆணை

(C) பதிவாளரின் சுற்றறிக்கை

(D) சங்கத் துணை விதிகள்

8. தண்டத்தீர்வை நடவடிக்கை நிலுவையில் இருந்தால் தேர்தலில் போட்டியிடவோ வேட்பு மனு தாக்கல் செய்யவோ தடை உள்ளது என்பது குறித்த கூட்டுறவு சட்டப்பிரிவு

(A) 34 (5) (b) (B) 34 (5) (a)

(C) 34 (4) (a) (D) 34 (1) (a)

9. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-ன்படி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்களில் எவ்வளவு ரூபாய்க்கு குறைவாக வரும் பொருளின் மதிப்பு அல்லது இழப்புத் தொகைகளுக்கான வழக்குகளை முடிவு கட்டலாம்.

(A) ரூ. 4 கோடி (B) ரூ. 3 கோடி

(C) ரூ. 5 கோடி (D) ரூ. 1 கோடி

10. தலைமைக் கூட்டுறவு சங்கத்தின் தணிக்கை அறிக்கையானது கீழ்க்கண்ட அமைப்பின் முன் வைக்கப்பட வேண்டும்.

(A) நாடாளுமன்றம்

(B) மாநிலங்கள் அவை

(C) மாநில சட்டமன்றம்

(D) நிதிக்குழு

11. தகராறு தொடர்புடைய ஆவணங்கள் ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து __________ வரையில் பதிவாளர் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

(A) 7 ஆண்டுகள்

(B) 10 ஆண்டுகள்

(C) 15 ஆண்டுகள்

(D) 8 ஆண்டுகள்

12. ஜப்தி செய்யப்படும் கால்நடைகளுக்கான தீவனம்

(A) சங்கம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(B) விற்பனை அலுவலர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(C) ஏலம் எடுப்பவர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(D) கால்நடை உரிமையாளரே ஏற்பாடு செய்ய வேண்டும்.

13. ஒரு கூட்டுறவு சங்கத்தின் துணை விதிகளில் கட்டாயத் துணை விதித் திருத்தம் செய்ய 1983-ம் வருட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தில் எந்த பிரிவின் கீழ் பதிவாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு - 11

(B) பிரிவு - 12

(C) பிரிவு - 13

(D) பிரிவு - 9

14. பணியாளர் பணிக்கொடைச் சட்டம் கீழ்க்கண்ட நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.

(A) செப்டம்பர் 16, 1972

(B) செப்டம்பர் 16, 1982

(C) அக்டோபர் 16, 1972

(D) அக்டோபர் 16, 1982

15. ஒரு சங்கத்தின் சம்பளம் பெறும் பணியாளரை தற்காலிகப் பணி நீக்கம் செய்யும் அதிகாரம் __________ சட்டப் பிரிவில் வழங்கப்பட்டுள்ளது.

(A) பிரிவு 66

(B) பிரிவு 76

(C) பிரிவு 86

(D) பிரிவு 96

16. ஒரு சங்கத்தின் நிகர இலாபப் பிரிவினையில் கீழ்க்கண்ட சதவீதம் வரை பதிவாளரின் முன் அனுமதியின்றி பங்கு ஈவுத்தொகை வழங்கலாம்.

(A) 9% வரை
(B) 12% வரை
(C) 18% வரை
(D) 14% வரை

17. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் 1952-ன்படி வருங்கால வைப்பு நிதிப் பிடித்தமாக ஊழியர்களின் ஊதியத்தில் கீழ்க்கண்ட விழுக்காடு கட்டாயப் பிடித்தம் செய்யப்படும்.

(A) 13%
(B) 15%
(C) 12%
(D) 10%

18. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1904 ஆம் ஆண்டு முதன் முதலாக ஒரு கூட்டுறவு கடன் சங்கம் கொண்டு வரப்பட்டதற்கு அறிஞர்கள் தலைமையில் குழுக்கள் ஏற்படுத்தியவர் யார்?

(A) கர்சன் பிரபு
(B) ரிப்பன் பிரபு
(C) லார்டு மவுண்ட் பேட்டன்
(D) லிட்டன் பிரபு

19. 1983-ம் வருட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தில் நிர்வாகக் குழுவில் பெண்களுக்கு எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(A) 40%
(B) 25%
(C) 30%
(D) 18%

20. ஒரு கூட்டுறவு சங்கத்தின் கணக்குகள் புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பராமரிக்க வேண்டியது குறித்து தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் எந்த விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) விதி 20
(B) விதி 24
(C) விதி 30
(D) விதி 19

21. ஒரு பதிவு பெற்ற கூட்டுறவு சங்கம் கூட்டுறவு சட்டத்தின் கீழ்க்கண்ட சட்டப் பிரிவின்படி கலைத்து ஆணையிடப்படுகிறது.

(A) பிரிவு 136
(B) பிரிவு 137
(C) பிரிவு 138
(D) பிரிவு 139

22. மத்திய / தலைமைக் கூட்டுறவு வங்கிகள் ______________-க்கு ஒரு முறை ரிசர்வ் வங்கியால் ஆய்வு செய்யப்படுகின்றன.

(A) இரண்டு ஆண்டுகளுக்கு
(B) மூன்று ஆண்டுகளுக்கு
(C) ஆறு மாதங்களுக்கு
(D) ஓராண்டு

23. ஒரு சங்கத்தின் நடைமுறை மூலதனம் கீழ்க்கண்ட ரூபாய்க்கு மேல் இருந்தால் அந்த சங்கம் பொதுப்பேரேடு பராமரிக்க வேண்டும்.

(A) ரூ. 1,00,000
(B) ரூ. 20,000
(C) ரூ. 30,000
(D) ரூ. 40,000

24. சங்கத்தின் சொத்துகளை தவறாகப் பயன்படுத்துதல் தொடர்பாக தண்டனை வழங்க கீழ்கண்ட பிரிவில் வழிவகை உள்ளது.

(A) பிரிவு 161
(B) பிரிவு 157
(C) பிரிவு 158
(D) பிரிவு 156

25. ஒரு சங்கத்தின் நிகர இலாபத்திலிருந்து காப்பு நிதி / சேம நிதிக்கு கீழ்க்கண்ட சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(A) 18 சதவீதம்
(B) 20 சதவீதம்
(C) 25 சதவீதம்
(D) 15 சதவீதம்

26. பின்வரும் கூற்றுகளை ஆய்வு செய்து அக்கூற்றுகளில் சரியானவை எவை என்பதை தேர்வு செய்க

1. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் நிலை முறைச் சட்டம்.
2. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் நடைமுறைச் சட்டம்.
3. நிலைமுறை சட்டமும் நடைமுறைச் சட்டமும் கூட்டுறவுச் சட்ட அமைப்பில் முதன்மை பெறும்.
4. 1934 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி சட்டத்தின் ஷரத்துகளை 1983-ம் ஆண்டு கூட்டுறவு சட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது.

(A) 1 மட்டும் சரியானது
(B) 1 மற்றும் 2 சரியானது
(C) 1, 2 மற்றும் 3 சரியானது
(D) அனைத்தும் சரியானது

27. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவற்றை தேர்ந்தெடுக்க.

(A) கூட்டுறவு சங்க சட்டப்படி தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலை சங்க அறிவிப்புப் பலகையில் தேர்தலுக்கு 10 நாட்கள் முன்பாக வெளியிட வேண்டும்.

(B) சங்கம் வாக்காளர் பட்டியலை தயாரிக்காத நிலையில் வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியலை தேர்தலுக்கு 7 நாட்கள் முன்பாக அறிவிப்புப் பலகையில் வெளியிட வேண்டும்.

(C) வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்பு பட்டியலில் ஆட்சேபணை ஏதும் இருப்பின் பட்டியல் வெளியிட்ட ஒரு நாளில் வாக்காளர் பட்டியல் அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும்.

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை ஆகும்.

28. ஒரு சங்கத்தின் உறுப்பினரை நீக்குதல் குறித்து நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ்க்கண்ட பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(A) பிரிவு 25
(B) பிரிவு 31
(C) பிரிவு 24
(D) பிரிவு 35

29. கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் ____________ சட்டப்பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

(A) 33
(B) 23 A
(C) 33 A
(D) 52

30. சரியான இணையைத் தேர்வு செய்க.

1. பிரிவு 21 - சங்க உறுப்பினர்களின் தகுதிகள்
2. பிரிவு 19 - கூட்டுறவு ஒன்றியங்கள்
3. பிரிவு 22 - இணை உறுப்பினர்கள்
4. பிரிவு 28 - அங்கத்தினர் தகுதியின்மைகள்

(A) 1, 2 மற்றும் 3 சரியானது
(B) 2, 3 மற்றும் 4 சரியானது
(C) 1, 3 மற்றும் 4 சரியானது
(D) அனைத்தும் சரியானது

31. இந்திய வருமான வரிச்சட்டம் 1961-ன்படி வைப்புகளுக்கான வட்டியிலிருந்து விலக்கு பெற வருமான வரித்துறை நிர்ணயித்துள்ள கீழ்க்காணும் படிவங்களில் ஒன்றை வைப்புதாரர்களிடமிருந்து வங்கி பெற்று வருமான வரித்துறைக்கு அளிக்க வேண்டும்.

(A) 15 G, 15 H
(B) 16 A, 16
(C) 7 A, 7 B
(D) 13 a, 13 h

32. 1904 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு நடைமுறைப்படுத்திய கூட்டுறவுக் கடன் சங்கங்களின் சட்டம் எத்தனை பிரிவுகளை கொண்டது?

(A) 29 பிரிவுகள்
(B) 56 பிரிவுகள்
(C) 66 பிரிவுகள்
(D) 38 பிரிவுகள்

33. இந்தியக் குற்றவியல் சட்டம் 1860-ன்படி பொய்யான ஆவணங்களைத் தயாரிப்பதன் மூலம் பொது மக்களுக்கோ அல்லது தனிநபருக்கோ இழப்பை ஏற்படுத்துவது தொடர்பான சட்டப்பிரிவு.

(A) பிரிவு 405
(B) பிரிவு 420
(C) பிரிவு 468
(D) பிரிவு 470

34. ஒரு சங்கத்தின் நிர்வாகக்குழு தேர்தலுக்கான நடைமுறைகள் கீழ்க்கண்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(A) விதி 52
(B) விதி 59
(C) விதி 60
(D) விதி 61

35. ஒரு கூட்டுறவு சங்கத்தைப் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் குறித்து 1983-ம் வருட தமிழ்நாடு கூட்டுறவு சங்கத்தின் கீழ்க்கண்ட பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(A) பிரிவு 9
(B) பிரிவு 11
(C) பிரிவு 6
(D) பிரிவு 8

36. இந்திய ஒப்பந்த சட்டம் 1872-ன்படி எந்த விதமான சட்டப் பாதுகாப்பும் இல்லாத உடன்பாடே கீழ்க்கண்ட ஒப்பந்தம் என வழங்கப்படுகின்றது.

(A) செல்லுபடியாகக் கூடிய ஒப்பந்தம்
(B) ரத்து செய்யப்பட்ட ஒப்பந்தம்
(C) ரத்து செய்யப்படக் கூடிய ஒப்பந்தம்
(D) நிறைவேற்ற முடியாத ஒப்பந்தம்

37. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983-ன்படி கூட்டுறவு சங்கத்தினைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தின் படிவம் எண்?

(A) படிவம் எண்-1
(B) படிவம் எண்-2
(C) படிவம் எண்-3
(D) படிவம் எண்-4

38. பொருள் விற்பனைச் சட்டம் 1930-ன்படி விற்பனைக்கான பொருள்களாகக் கருதப்படுபவை

(A) அசையும் பொருட்கள்
(B) சரக்கு இருப்புகள்
(C) வருங்காலத்தில் உற்பத்தியாகும் பொருட்கள்
(D) மேற்குறிப்பிட்ட மூன்றும்

39. 1983 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்படி ஒரு கலைத்த சங்கத்தை மீண்டும் புதுப்பிப்பது குறித்தான சட்டப்பிரிவு

(A) பிரிவு 141
(B) பிரிவு 145
(C) பிரிவு 147
(D) பிரிவு 142

40. ஒரு சங்கத்தின் நிகர இலாபத்தில் 15% விவசாயக் கடன் நிலை நிறுத்தும் நிதிக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும் என்பதைக் குறிப்பிடும் சட்ட விதி எண் என்ன?

(A) விதி 100
(B) விதி 98
(C) விதி 93
(D) விதி 96

41. சங்கத்தின் பொதுப்பேரவைக் கூட்டம் நிதி ஆண்டு முடிவுற்ற 6 மாதங்களுக்குள் கீழ்க்கண்ட காரணத்திற்காகக் கூட்டப்பட வேண்டும்.

(A) தணிக்கை அறிக்கை மற்றும் இறுதி ஆண்டறிக்கை பரிசீலிக்க
(B) வரவு - செலவு அனுமதிக்க
(C) நிகர இலாபப் பிரிவினை செய்ய
(D) மேற்குறிப்பிட்ட அனைத்திற்காகவும்

42. SARFAESI சட்டம் 2002 நடைமுறைக்கு வந்த நாள்.

(A) ஜூன் 21, 2003

(B) ஜூன் 11, 2002

(C) ஜூன் 21, 2002

(D) அக்டோபர் 12, 2005

43. ஒரு பதிவு பெற்ற கூட்டுறவு சங்கத்திற்குத் தணிக்கை முடிவு பெற்ற பின்னர் கீழ்க்கண்ட விதியின் கீழ் தணிக்கைச் சான்று வழங்கப்படுகின்றது.

(A) விதி 101

(B) விதி 102

(C) விதி 103

(D) விதி 104

44. உணவு கலப்படத் தடுப்புச் சட்டம் 1954ன்படி விற்பனையாளருக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் சட்டப்பிரிவு

(A) பிரிவு 16

(B) பிரிவு 7

(C) பிரிவு 5

(D) பிரிவு 19

45. சங்கத்தில் நடைபெறும் நிர்வாகக்குழு உறுப்பினர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை கீழ்க்கண்ட பிரிவில் வழங்கப்பட்டுள்ளது.

(A) பிரிவு 30

(B) பிரிவு 28

(C) பிரிவு 42

(D) பிரிவு 26

46. இந்திய தொழில் தகராறு சட்டம் 1947-ன் பிரிவு ____________ன் படி முறையற்ற வேலை நிறுத்தம் செய்வதும் அல்லது கதவடைப்பு செய்வதும் சட்டத்தை மீறிய செயல்களாகக் கருதப்படும்.

(A) பிரிவு 23

(B) பிரிவு 22

(C) பிரிவு 24

(D) மேற்குறிப்பிட்ட ஏதுமில்லை

47. ஒரு சங்கத்தின் நிர்வாகக்குழு கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ள அறிவிப்பு கொடுத்த தேதியிலிருந்து கீழ்க்கண்ட நாட்களுக்குள் இறுதி ஆணை பிறப்பித்து ஆணையிடப்பட வேண்டும்.

(A) 3 மாதங்கள்
(B) 6 மாதங்கள்
(C) 2 மாதங்கள்
(D) 9 மாதங்கள்

48. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983-ல் நிகர இலாபப் பிரிவினை பற்றி ________________ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) பிரிவு 70
(B) பிரிவு 71
(C) பிரிவு 69
(D) பிரிவு 72

49. மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின்படி ஒரு காசோலை எத்தனை மாதங்களுக்குள் காலாவதியானதாக அறிவிக்கப்படுகிறது?

(A) 3 மாதங்களுக்கு மேல்
(B) 6 மாதங்களுக்கு மேல்
(C) 9 மாதங்களுக்கு மேல்
(D) 2 மாதங்களுக்கு மேல்

50. தணிக்கைக் கட்டணத்தைக் கட்டாத சங்கங்களின் மீது கீழ்க்கண்ட பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு வசூலிக்கலாம்.

(A) பிரிவு 102
(B) பிரிவு 148
(C) பிரிவு 104
(D) பிரிவு 88

51. சட்டப்பிரிவு 90ன்கீழ் தாவாவில் தொடர்புடைய கோப்பு தாவா இறுதியாணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து எத்தனை காலத்திற்கு பாதுகாக்கப்பட வேண்டும்?

(A) 10 ஆண்டுகள்
(B) 15 ஆண்டுகள்
(C) 6 ஆண்டுகள்
(D) 5 ஆண்டுகள்

52. இந்திய மக்கள் வறுமையிலிருந்து விடுபடவும் சுய சார்பு நிலையை அடையவும் முதன்முதலாக கூட்டுறவுக் கடன் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு?

(A) 1885
(B) 1900
(C) 1918
(D) 1904

53. பணியாளர் பணிக்கொடைச் சட்டம் 1972-ன்படி பணியாளர் ஒருவர் ஓராண்டு காலம் ஒரு நிறுவனத்தில் வேலை செய்வதற்கு பணிக்கொடையாக வருடத்திற்கு கீழ்க்கண்ட நாட்கள் ஊதியத்தை அவருக்கு இலவசமாக வழங்குதல் பணிக்கொடை என்பதாகும்.

(A) 12 நாட்கள்
(B) 18 நாட்கள்
(C) 20 நாட்கள்
(D) 15 நாட்கள்

54. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி ஒப்பந்தம் எனப்படுவது யாதெனில்

(A) ஒரு உடன்பாடு ஆகும்
(B) ஒரு பேச்சளவில் ஆனது
(C) இரு மாறுப்பட்ட கருத்துக்கள் கொண்டது
(D) எந்த வயதினராலும் மேற்கொள்ளக் கூடியது

55. 1983 ஆம் வருடத்திய கூட்டுறவு சங்க சட்டத்தில் உள்ள பிரிவுகளின் எண்ணிக்கை

(A) 170
(B) 174
(C) 194
(D) 184

56. மேலாண்மை இயக்குநரின் அதிகாரங்கள் குறித்து கூட்டுறவு சங்க விதிகள் விதி எண் ________ ல் கூறப்பட்டுள்ளது.

(A) விதி எண்.146
(B) விதி எண்.36
(C) விதி எண்.126
(D) விதி எண்.116

57. தற்போது நடைமுறையில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின் எண்ணிக்கை மற்றும் நடைமுறைக்கு வந்த நாள்.

(A) பிரிவுகள் 80 விதிகள் 190 – 13.04.1986
(B) பிரிவுகள் 190 விதிகள் 184 – 13.04.1987
(C) பிரிவுகள் 184 விதிகள் 190 – 13.04.1988
(D) பிரிவுகள் 174 விதிகள் 190 – 13.04.1985

58. கூட்டுறவு சங்கங்கள் அமைப்பது மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(A) 1983 ஆம் ஆண்டு சட்டம்

(B) 1904 ஆம் ஆண்டு சட்டம்

(C) 97-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம்

(D) இதில் ஏதுமில்லை

59. சங்கத்தின் முகவரி மாற்றப்பட்ட ____________ தினங்களுக்குள் முகவரி மாற்றம் குறித்த தகவல் பதிவாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(A) 60 நாட்கள்

(B) 7 நாட்கள்

(C) 30 நாட்கள்

(D) 15 நாட்கள்

60. பின்வரும் கூற்றுகளை ஆய்வு செய்து அக்கூற்றுகளில் சரியானவை எவை என்பதை தேர்வு செய்க

1. கூட்டுறவு தீர்ப்பாயத்திற்கு நீதித்துறையைச் சார்ந்த சார்நிலை நீதிபதி நியமனம் சட்டப் பிரிவு 151-ன்படி நியமனம் செய்யலாம்.

2. தொழிற் தகராறு சட்டம் 1947-ன்படி தொழிலாளர் நீதிமன்றத்திற்கு உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் அல்லது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை மாநில அரசு நியமனம் செய்யலாம்.

3. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-ன்படி மாவட்ட நீதிபதி அல்லது அவர் தகுதிக்கு குறையாத ஒரு நீதிபதி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் இடம் பெற வேண்டும்.

4. தேசிய நுகர்வோர் நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டு மனுவினை மத்திய அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(A) 1 மற்றும் 4 சரியானது

(B) 2 மற்றும் 4 சரியானது

(C) 3 மற்றும் 4 சரியானது

(D) 1, 2 மற்றும் 3 சரியானது

61. ஒரு பதிவான கூட்டுறவு சங்கம் விதி 8-ன்படி சங்கம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து கீழ்கண்ட நாட்களுக்குள் பணிகளை தொடங்க வேண்டும்

(A) 3 மாத காலங்கள்

(B) 6 மாத காலங்கள்

(C) 1 மாத காலம்

(D) 12 மாதங்கள்

62. ஒரு கூட்டுறவு சங்கத்தின் புத்தகங்களில் உள்ள பதிவுகளின் நிரூபணத் தன்மை குறித்து சங்க ஆவணங்களின் நகலினை ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாம் என்பதனை குறிப்பிடும் சரியான சட்டப்பிரிவு.

(A) பிரிவு 48

(B) பிரிவு 47

(C) பிரிவு 45

(D) பிரிவு 43

63. எடை அளவுச் சட்டம் 1958-ன்படி வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சங்கப் பணியாளர்களை இச்சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாக குறைவான எடைகளையோ அல்லது அளவைகளையோ முதல் முறையாக பயன்படுத்தினால் ரூ ______________ அபராதம் விதிக்கலாம்.

(A) ரூ. 1000

(B) ரூ. 250

(C) ரூ. 500

(D) ரூ. 750

64. நீண்ட காலக் கடன் வழங்குவதற்கான கட்டமைப்பை வலுப்படுத்த எக்குழுவின் சிபாரிசுப் படி கூட்டுறவு நில அடமான வங்கிகள் சட்டம் 1934-ல் இயற்றப்பட்டது.

(A) அகில இந்திய கிராமக் கடன் மதிப்பீட்டுக்குழு

(B) மாண்டேகு ஜேம்ஸ் போர்டு குழு

(C) புஷன் ஷெட் குழு

(D) மேத்தா குழுவின் சிபாரிசு

65. ஒரு சங்கத்தின் முதன்மை அமைப்பாளர் உறுப்பினர்களிடமிருந்து வசூலித்த அனாமத்துத் தொகையை கீழ்க்கண்ட நாட்களுக்குள் பதிவாளரால் அனுமதிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

(A) 15 நாட்கள்
(B) 30 நாட்கள்
(C) 7 நாட்கள்
(D) 21 நாட்கள்

66. நடப்பில் உள்ள கூட்டுறவு சட்டப்படி ஒரு கூட்டுறவு சங்கம் தனது நிகர இலாபத்தில் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு விதி எண். 91-ன்படி எத்தனை விழுக்காடுகள் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்?

(A) 5 %
(B) 4 %
(C) 3 %
(D) 2 %

67. ஒரு கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகமானது கீழ்க்கண்டவர்களால் நிர்வாகம் செய்யப்படுகின்றது.

(A) பங்குதாரர்களால்
(B) உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினர்களால்
(C) சங்கங்களின் பணியாளர்களால்
(D) தணிக்கை அலுவலர்களால்

68. ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக சபையின் அமைப்பு மற்றும் கூட்டங்கள் குறித்தான சட்டப் பிரிவினைக் குறிப்பிடுக.

(A) பிரிவு 33
(B) பிரிவு 33 A
(C) பிரிவு 34
(D) பிரிவு 38

69. ஒரு கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராவதற்குரிய தகுதிகள் மற்றும் தகுதியின்மைகள் கீழ்க்கண்ட சட்ட பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

(A) பிரிவு 20 மற்றும் 21
(B) பிரிவு 21 மற்றும் 22
(C) பிரிவு 21 மற்றும் 23
(D) பிரிவு 21 மற்றும் 24

70. கூட்டுறவு சட்ட விதிகள் 98-ன்படி பொதுநல நிதியிலிருந்து பதிவாளரின் அனுமதியின்றி தொடக்க கூட்டுறவு சங்கங்கள், மத்திய மற்றும் தலைமைச் சங்கங்கள் கீழ்கண்ட தொகையை செலவு செய்யலாம்?

(A) ரூ. 50,000 வரை
(B) ரூ. 75,000 வரை
(C) ரூ. 1,00,000 வரை
(D) ரூ. 25,000 வரை

71. கூட்டுறவு சட்டம், விதிகள் மற்றும் துணைவிதிகளுக்கு உட்பட்டு ஒரு சங்கத்தின் முடிவான அதிகாரம் யாரிடம் இருக்கும்?

(A) பதிவாளரிடம்

(B) சங்க செயலாளர்

(C) சங்கத் தலைவர்

(D) பொதுப் பேரவை

72. ஒரு நிர்வாகக் குழுக் கூட்டப் பொருள் தொடர்பான வாக்கெடுப்பின் போது சம எண்ணிக்கை (Equality of Votes) ஏற்படின் கீழ்க்கண்ட நபருக்கு கூடுதல் வாக்கு (Casting Vote) அளிக்கும் அதிகாரம் உள்ளது.

(A) தலைவர்

(B) துணைத்தலைவர்

(C) மூத்த உறுப்பினர்

(D) பெண் உறுப்பினர்

73. ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு செயலாட்சியர் நியமனம் குறித்து கீழ்க்கண்ட சட்டப்பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(A) பிரிவு 88

(B) பிரிவு 89

(C) பிரிவு 90

(D) பிரிவு 87

74. ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் சங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் (BUDGET) அங்கீகரிக்கப்படாவிட்டால் யாரால் அங்கீகரிக்கப்பட நடப்புச் சட்டத்தில் வழிவகை உள்ளது.

(A) தலைவர்

(B) நிர்வாகக்குழு

(C) பதிவாளர்

(D) நிதி உதவும் வங்கி

75. கூட்டுறவுக் கல்வி நிதிக் குழுவின் தலைவர் யார்?

(A) மாநிலக் கூட்டுறவு ஒன்றியத்தின் செயலாட்சியர்

(B) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்

(C) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர்

(D) மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கியின் செயலாட்சியர்